
மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
இரண்டாம் தவணைப் பரீட்சை – 2023

தரம் : 11 சுகாதாரமும் உடற்கல்வியும் நேரம் : 3 மணி

பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01.




சுகாதாரம் தொடர்பாக வெற்றுக் கூண்டினுள் குறிப்பிடக் கூடியது பின்வருவனவற்றுள் எதுவாகும்?

1) ஆரோக்கிய நலம் 2) சமூக நலம் 3) சுகநலம் 4) பொருளாதார நலம்

02. நோய்களைத் தடுப்பதில் விற்றமின்கள் பங்களிப்பும் தேவைப்பாடன ஒன்றாகும். இன்று அதிகமாகப் பரவிவரும் புற்றுநோய் ஏற்படுவதை குறைக்க கூடிய விற்றமின் தொகுதி எது?

1) விற் A, D, K 2) விற் B, C 3) விற் A, C, E 4) விற் A, D

03. இலங்கையைப் பொறுத்தவரையில் போசாக்கு தொடர்பான பிரச்சினை பல்வேறு மட்டத்தில் ஆரோக்கியம் தொடர்பான விடயத்தில் பின்னடைவையே காட்டி நிற்கிறது. கருவுற்ற தாய் ஒருவரின் உடல் நிறை எவ்வளவு கிலோகிராம் அதிகரித்தல் நன்று என எதிர்பார்க்கப்படுகிறது?

1) 7.5 Kg 2) 8 Kg 3) 6 Kg 4) 12 Kg

04 சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றி கொள்வதே சாலச் சிறந்ததாகும். மாணவன் ஒருவனுக்கு கல்வி சார்பான சமூகவியலில் ஏற்படும் சவால் ஒன்றாக அமைவது எது?

1) தனக்கு விருப்பமான துறையைத் தானே தெரிவு செய்ய முடியாமல் இருத்தல்
2) படிக்கும் போது ஏற்படும் சோர்வு
3) படிப்பதற்கு ஏற்ற சூழல் எண்ணிக்கை அதிகமாக இருத்தல்
4) குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல்

05. தனிநபர் தொடர்பான கொள்கைகள்

A – நான் மது அருந்த மாட்டேன்

B – போதைப் பழக்கத்திற்கு ஓரளவு அடிமையாகலாம்

C – அடுத்தவருக்கு இடையூறின்றி வாழ்வேன்

1) A யும் B யும் சரி 2) A யும் C யும் சரி
3) B உம் C யும் சரி 4) மூன்றும் சரி

06 உடல் வளர்ச்சி நன்றாக உள்ள ஒருவருக்கு இருக்கக் கூடிய உடற்திணிவுச் சுட்டி (B.M.I) பெறுமானம் எதுவாகும்?

1) 18.5 ஐ விடக் குறைவு 2) 18.5 – 25.0
3) 25.0 – 30.0 4) 30.0 இற்கு மேல்

07 தினம் தோறும் உடற்பயிற்சியில் ஈடுபடும் போது

கூற்று : உடல்விருத்தி ஏற்படும்
காரணம் : ஆரோக்கியம் பேணப்பட்டு திறன் விருத்தியுடன் மகிழ்வாக வாழலாம்

1) கூற்று சரி காரணம் பிழை 2) கூற்றும் சரி காரணமும் சரி
3) கூற்று பிழை காரணம் சரி 4) இரண்டுமே தவறு

08 காலை வெய்யிலில் உடற்பயிற்சி செய்தல் நன்றாகும் என்பதற்கு அமையவே பிரார்த்தனையின் பின் உடற்பயிற்சிச் செயற்பாடு இடம்பெறுகின்றது. குறைபாட்டு நோய்களுள் என்புருக்கி நோயும் ஒன்றாகும். இது எக்குறைபாட்டால் ஏற்படுகிறது?

1) புரதம் 2) அயடீன் 3) விற்றமின் D 4) கனியுப்பு

09 ஒருவர் உட்கொள்ளும் உணவு சக்கியாக மாற்றப்பட்டு எமது உடலியக்கத்திற்கு உதவுகின்றது. பின்வருவனவற்றுள் கலங்களுக்கு ஒட்சிசனையும் போசனைப் பொருட்களையும் எடுத்துச் செல்ல உதவுவது

1) குருதி 2) வெல்லம் 3)சிறுநீர் 4) நீர்

10 அசைவற்ற கொண்ணிலை எனப்படுவது பின்வருவனவற்றுள் எது?

1) ஓடுதல் 2) இருத்தல் 3) நடத்தல் 4) பாய்தல்

11 நாம் உடற்பயிற்சி செயற்பாட்டில் ஈடுபடும் போது இதயத் துடிப்பு வீதம் அதிகரித்து காணப்படும் என ஆசிரியர் கூறி இருந்தார் அவ்வாறெனின் சாதாரண மனிதனின் இதய துடிப்பு வீதம் யாது?

1) 70/நிமி 2) 72/நிமி 3) 65/நிமி 4) 80/நிமி

12

| | |
|---|---|
| ரவி | 100m, 400m |
| பாலன் | 1500m, 5000m |
| ரமணி | 100m, 100mH |

மேலேயுள்ள அட்டவணையில் ரவியின் ஓட்டப் புறப்பாட்டிற்கான கட்டளை பின்வருவனவற்றில் எது?

1) On your marks - Fire 2) On your marks – Set - Fire

3) On your marks – Set 4) On your marks – Set – Ready - Go;

13 கீழே தரப்பட்டவற்றுள் பெண்களுக்கான தடைதாண்டல் நிகழ்ச்சி எது?

1) 110m, 400m 2) 110m,100m 3) 100m,400m 4) 100m,200m

14 A – அதிக தாகம்

B - களைப்பு

C – அடிக்கடி சிறுநீர் வெளியேற்றம்

மேற்கூறிய காரணங்களால் ஏற்படக் கூடியது?

1) இருதய நோய் 2) கசநோய் 3) நீரிழிவு 4) இலுக்கோமோபீலியா

15

| | |
|---|---|
| a | எயிட்ஸ் |
| b | கோணேரியா |
| c | சிபிலிசு |
| d | மரஸ்மஸ் |

பின்வருவனவற்றுள் சமூக நோய் அல்லாதது எது?

1) a 2) b 3) c 4) d

16 முகப்பூச்சுக்கள் தான் தோலின் நிறத்துக்கான காரணமாக அமைந்தது என்பது சில மாணவர்களின் கருத்தாகும் இருப்பினும் தோலின் நிறத்துக்கு காரணமாக அமைவது

1) குளிர் 2) சூரியஒளி 3) மெலனின் 4) வெப்பம்

17 கூட்டு நிகழ்ச்சிகள் எத்தனை வகைப்படும்?

1) 2 2) 3 3) 5 4) 6

18 சர்வதேச தரத்திரலான சுவடு ஒன்றின் நீளம் எத்தனை மீற்றர் அதில் ஆகக் குறைந்தது எத்தனை சுவடுகள் இருக்கும்?

1) 200m, 6 2) 200m, 8 3) 400m, 6 4) 400m, 8

19 சாதனை ஒன்று அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் அந்நிகழ்ச்சியில் குறைந்தது எத்தனை போட்டியாளர்கள் பங்குபற்ற வேண்டும்?

1) 3 பேர் 2) 5 பேர் 3) 2 பேர் 4) 8 பேர்

20 வலைப்பந்தாட்டத்தின் பந்துப்பரிமாற்றம் அல்லாதது இதில் எதுவாகும்?

1) லொப் பாஸ் 2) பம் பாஸ் 3) பவுண்ஸ் பாஸ் 4) செஸ்ட் பாஸ்

21 முப்பாய்தல் நிகழ்வில் முறையான பாதவைப்பு என்பது ஒரு திறனாகும். அவ்வாறெனின் பின்வருவனவற்றுள் எது சரியானதாகும்?

1) வலது வலது வலது 2) வலது வலது இடது
3) வலது இடது வலது 4) இடது வலது இடது

22 இல்ல மெய்வல்லுநர் போட்டிகளின் சிறப்பான விடயங்களில் அணிநடையும் ஒன்றாகும். அணிநடையில் அணித்தலைவருடன் எத்தனைபேர் பங்கு கொள்வர்

1) 19 2) 21 3) 24 4) 25


23 தேசிய போட்டிகளில் காற்பந்தாட்டத்தின் ஒரு அரைப்பகுதி விளையாட்டுக்குரிய நேர அளவு யாது?

1) 60 நிமி 2) 45 நிமி 3) 90 நிமி 4) 20 நிமி

24 மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் சுவடு ஒன்றின் அகலத்தை மீற்றரில் தருக?

1) 1.21 − 1.23 2) 1.22 − 1.25 3) 1.21 − 1.25 4) 1.21 − 1.22

25 நிழற்றிய படத்தில் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் ஆடக் கூடிய வலைப்பந்தாட்ட வீராங்கனை யாா.?



1 GS

2 GK

3 C

4 GA

26 கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட, துடுப்பாட்ட போட்டிகளில் பங்குபற்றும் **ஆட்ட வீரர்களின்** எண்ணிக்கையை முறையே சரியாக குறிப்பிடுவது?

1) 11,5,7 2) 12,12,16 3) 5,7,11 4) 6,7,11

27 பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஆரம்ப நிகழ்வாக இடம்பெறும் 10 km தூர ஓட்டம் எவ்வாறு அழைக்கப்படும்?

1) மரதன் ஓட்டம் 2) வீதி ஓட்டம்
3) மத்திம தூர ஓட்டம் 4) பாட்லெக் ஓட்டம்

28 நோய்கள் பரிசோதனை மூலம் சரியாக இனம்காணப்பட்ட பின்னரே சிகிச்லச மேற்கொள்ளப்படும். ELISA TEST எந் நோய்த் தொற்றை கண்டுபிடிக்க சோதிக்கப்படுகிறது?

1) மலட்டுத்தன்மை 2) சலரோகம் 3) எயிட்ஸ் 4) புற்றுநோய்

29 தமது அணியின் அறைதல் வீரரை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவே லிபரோவை (Libero) வொலிபோலில் பயன்படுத்துவர் லிபறோ வீரரால் செய்ய முடியாத செயல் எது?


1) பந்தை எதிரணிக்கு அனுப்பலாம் 2) பந்தைப் பெறலாம்
3) பந்தை ஒழுங்கமைக்கலாம் 4) பந்தை பணிக்கலாம்

30 பாதுகாப்பற்ற மின்சாரப் பாவனையால் ஒருவருக்கு விபத்து ஏற்படும்

A – அவருக்கு எரிவு ஏற்படலாம்
B – அதிர்ச்சி ஏற்படலாம்
C - மரணம் ஏற்படலாம் பின்வருவனவற்றுள் சரியானது?

1) A,B சரி 2) B,C சரி 3) A,C சரி 4) மூன்றும்சரி

31 இச் செயற்பாடு எத்தனையாம் வகை நெம்பு ஆகும்?



1) 1ம் வகை 2) 2ம் வகை 3) 3ம் வகை 4) எதுவுமல்ல

32 அதிக இரசிகர்களை கெண்ட விளையாட்டு காற்பந்தாட்டம் ஆகும் உலக அளவில் காற்பந்தாட்ட விதிமுறைகளைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட அமைப்பு பின்வருவனவற்றுள் எதுவாகும்?

1) FIVB 2) FIFA 3) IPL 4) WA

33

| | |
|---|---|
| தொகுதி 1 | ஹொக்கி, ரெனிஸ், கபடி, பட்மின்ரன் |
| தொகுதி 2 | கரப்பந்து, எல்லே, பட்மின்ரன், மேசைப்பந்தாட்டம் |
| தொகுதி 3 | மேசைப்பந்து, ரெனிஸ், கரப்பந்து, படமின்ரன் |
| தொகுதி 4 | ரெனகொயிட், பட்மின்ரன், கபடி, மேசைப்பந்து |

மேலே குறிப்பிட்டவற்றுள் பணித்தலுடன் ஆரம்பிக்கும் விளையாட்டுக்களைக் கொண்ட தொகுதி யாது?

1) தொகுதி 1 2) தொகுதி 2 3) தொகுதி 3 4) தொகுதி 4

34 சாரணியச் சுற்றுலாவுக்கு சென்ற எமது பாடசாலை குழுவினர் முகாம் அமைத்தலுக்காக படத்தில் காட்டப்பட்ட கட்டைப் பயன்படுத்தியதாக ஒரு சாரணன் கூறினான் இக் கட்டு எவ்வாறு அழைக்கப்படும்?




1) துணிக்கட்டு 2) குற்றி முடிச்சு 3) நேர்க்கட்டு 4) சதுரக்கட்டு

35 தரமான பொருட்களை உண்பதால் பாதிப்புக்கள் ஏதும் ஏற்படாது. பைக்கற்றில் அடைக்கப்பட்ட பொருளை வாங்கும் போது கவனிக்க வேண்டியவை எவை?

A- காலாவதியாகும் திகதி
B- உற்பத்தி செய்த நிறுவனம்
C- விலை

1) A மாத்திரம் 2) B,C மாத்திரம் 3) A,C மாத்திரம் 4) மூன்றும்

36 – 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்ட உருவைப் பயன்படுத்தி விடை தருக




36 மேலேயுள்ள மைதானங்களில் குண்டெறிதல் மைதானம் எது?

1) உரு A  2) உரு B  3) உரு C மாத்திரம்  4) உரு D

37 மைதானம் B நீளம்பாயும் மைதானமெனின் மிதித்தெழு பலகைக்கும் குழிக்கும் இடையேயான தூரம் மீற்றரில் யாது?

1) 1 – 3  2) 1 - 5  3) 2 – 4  4) 2 - 5

38 மைதானம் D யினது விட்டத்தை தருக?

1) 2.135 m  2) 2.5 m  3) 2.315 m  4) 2.75 m

39 மைதானம் E ல் சர்வதேச போட்டியின் போது பாவிக்கப்படும் பெண்களுக்கான ஈட்டியின் நிறை யாது?

1) 800g  2) 700g  3) 600g  4) 500g

40 மைதானம் C ன் சிறந்த பாய்தல் முறை எவ்வாறு அழைக்கப்படும்

1) பரி ஓ பிரெயின்  2) குதிரை லாடன் முறை
3) ஹங்கிங் முறை  4) பொஸ்பரி புளெப் முறை

**(1 x 40 = 40 புள்ளிகள் )**

## பகுதி II

**முதலாம் வினா உட்பட, பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.**

01. **மத்திய மகா வித்தியாலய மாணவனான விமல் கட்டான உடலமைப்பும் மற்றையவர்களை மதிக்கின்ற பண்பும் கொண்டவனாவான். இவன் விளைாட்டுப் போட்டிகளில் 100m , நீளம் பாய்தல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றதுடன் தனது உணவிலும் விசேட கவனம் செலுத்தி வருகின்றான் இவர்கள் மலை நாட்டினை பார்வையிட சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அங்கே கூட்டாஞ்சோறு சமைத்து உண்டு மகிழ்ந்தனர். மாலை வேளை உதைபந்தாட்டம் மற்றும் வலைபந்தாட்டத்தையும் விளையாடி மகிழ்ந்தனர் இதன்போது ராகவி என்ற மாணவி தசைப்பிடிப்பு காரணமான அவதியுற்றாள்.இவர்கள் தங்கிய பாடசாலையில் மாலை நேரம் சில மாணவர்கள் பட்மின்டன் பயிற்சியிலும் ஈடுப்பட்டனர்.**

1. விமலிடம் காணப்பட்ட உடற் சுகாதாரப் பணபுகள் யாது?
2. விமல் பங்குபற்றிய செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
3. உள்ளக விளையாட்டுக்கள் இரண்டைக் குறிப்பிடுக?
4. இம் மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள் இரண்டினைத் தருக?
5. இங்கு குறிப்பிடப்படாத கலப்பு உணவுகள் இரண்டு தருக?
6. ராகவிக்கு தசைப்பிடிப்பு வர ஏதுவான காரணம் என்னவாக இருக்கலாம்?
7. விமல் பங்கு கொண்ட ஓட்ட வகையைச் சார்ந்த வேறு ஓட்டங்கள் நான்கு தருக?
8. விசேட போசனைத் தேவையுடையோர் இருவரைத் தருக?
9. கலப்பு உணவை உண்பதால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக?
10. இச் சுற்றுலாவை மேற் கொண்டதால் உம்மிடம் ஏற்பட்ட உள மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

**( 20 புள்ளிகள் )**

## பகுதி I

2 கல்லூரியில் சுகாதார பரிசோதகரால் நடாத்தப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் மணவர்களிடம் காணப்பட்ட குறைபாடுகள் விபரம் வருமாறு

| | |
|---|---|
| முகிலன் | மாலை நேரங்களில் வாசிப்பதற்கு இடர்ப்படுகிறான் |
| ரமேஸ் | மந்த புத்தியுடையவனாகக் காணப்படுகிறான் |
| பாவலன் | அதிக எடை வேலைகளை மேற்கொள்ள களைப்பு ஏற்படல் |
| தாரணி | கண்ட மாலை நோயால் அவதிப்படுகிறான் |
| பிறேம் | தொற்றாத நோய் ஒன்றால் அவதிப்படுவதாக் குறிப்பிடுகிறான் |

1 மேலே பாவலனுக்கு ஏற்படக் கூடிய நோய்கள் இரண்டைக் குறிப்பிடுக? **(02 புள்ளிகள்)**

2 ரமேஸ்˙ மற்றும் தாரணிக்கு எக்குறைபாட்டு நோய்கள் ஏற்பட்டுள்ளன? **(02 புள்ளிகள்)**

3 பிறேமிற்கு ஏற்பட்டுள்ள தொற்றாத நோய் எதுவாக இருக்கலாம்? **(02 புள்ளிகள்)**

இதனைத் வரமுன் காப்பதற்கு மேற் கொள்ள வேண்டிய நடைமுறைகள் 4 குறிப்பிடுக? **(04 புள்ளிகள்)**

03. காலை உணவு அதிக போசணைப் பொருட்களைக் கொண்டதாக அமைவது அவசியமான ஒன்றாகும். பாணையும் பட்டரையும் காலை உணவாக உட்கொள்ளும் கமலி கூறுகிறாள்.

(i) கமலி உட்கொண்ட உணவில் அடங்கியுள்ள உணவின் பிரதான போசனைக் கூறுகள் யாவை? **(01 புள்ளி)**

(ii) மேலே குறிப்பிட்ட போசணைப் பதார்த்தங்கள் தவிர்ந்த ஏனைய உணவின் கூறுகள் யாவை? **(02 புள்ளிகள்)**

(iii) மேலே (i) இ( ii) வினாக்களிலும் கூறப்பட்டுள்ள போசணைக் கூறுகளினால் ஆற்றப்படும் தொழில்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக. **(05 புள்ளிகள்)**

(iv) உணவைப் பேணிப் பாதுகாக்கும் முறைகளில் பதப்படுத்தலும் ஓர் முறையாகும். பழத்தைப் பேணிப் பாதுகாத்தலின் தகரத்தில் அடைத்தலில் கிடைக்கும் அனுகூலம் ஒன்றையும் பிரதிகூலம் ஒன்றையும் குறிப்பிடுக.
**(02 புள்ளிகள்)**

04. பாடசாலைச் சுகாதார வேலைத்திட்டத்தில் துடிப்படன் பங்கேற்கும் உங்களிடத்தே நண்பர்கள் சிலர் பின்வரும் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுக்கலாம் என ஆலோசனை கேட்கின்றார்கள். அச்சவால்களுக்கு உடன்பாடாக முகங்கொடுக்க நீங்கள் உதவும் முறையைச் சுருக்கமாக விபரிக்க.

(i) மாணவன் ஒருவர் பாக்கு பற்கெற்று ஒன்றை பாடசாலைக்கு கொண்டு வந்து அதனை உடைத்து இடைவேளையின் போது உமக்கும் உண்ணத் தருகிறார் **(02 புள்ளிகள்)**

(ii) உமது தொலைபேசிக்கு அடிக்கடி அறிமுகமில்லாத இலக்கத்திலிருந்து ஒருவர் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் **(02 புள்ளிகள்)**

(iii) ரமணி சங்கீதத்திலும் நடனத்திலும் மிக வல்லவர். இத்துறைகளில் மேலும் கற்க வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பாகும்.ஆனால் தனது மகளை வைத்தியராக்க வேண்டும் எனும் தீராத ஆசையை அவளது அம்மா கொண்டுள்ளார். அதன் காரணமாக அவளை விஞ்ஞானத் துறையில் கற்க வேண்டும் எனப் பலவந்தப்படுத்துகிறமர் **(02 புள்ளிகள்)**

(iv) நீர் வீட்டில் தனியாக உள்ள போது உங்களது வீட்டிற்கு டெங்குப் பரிசோதனைக்காக சுகாதாரப் பரிசோதகருடன் இன்னொருவர் வந்து நிற்றல். **(02 புள்ளிகள்)**

(v) பாடசாலை முடிந்தபின் இரு மாணவ குழுக்கள் தம்மிடையே அடிக்கடி மோதிக் கொள்ளல். **(02 புள்ளிகள்)**

## பகுதி II

05 குறைந்த நேரத்தில் கூடிய தூரத்தை ஓடுதல் வேகம் எனப்படும். இதுவே வெற்றியை தீர்மானிக்கும்

1) விரைவான ஓட்டத்திற்கு பயன்படும் தசை எவ்வாறு அழைக்கப்படும்?( 2 புள்ளிகள் )
2) அடினோசின்முப்பொஸ்பேற்று ( ATP ) சக்தி இழப்பு ஏற்படும் போது தாக்கத்தை தருக? ( 3 புள்ளிகள் )
3) காற்றுச் சுவாசத்தின் போது குளுக்கோசில் ஏற்படும் சக்தி மாற்றம் என்ன என்பதை தருக? ( 3 புள்ளிகள் )
4) விரைவோட்டத்திற்கான பயிற்சி முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக?( 2 புள்ளிகள் )

06 ஐக்கிய விளையாட்டுக் கழகம் தனது பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாட கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றை நடாத்த தீர்மானித்து இருந்தது. இப் போட்டிக்காக 07 அணிகள் தம்மைப் பதிவு செய்திருந்தன எனினும் இப் போட்டியை நடாத்த நிதி போதாமல் இருந்தது

1 இப்போட்டியை நடாத்த சிறந்த முறை எதுவென நீர் கருதுவீர்? ( 2 புள்ளிகள் )
2 இப் போட்டியை நடாத்த விலகல் முறையிலான நிரல் ஒன்றினை தயாரிக்க? ( 5 புள்ளிகள் )
3 ஒருவேளை இப் போட்டியை லீக் முறையில் வைப்பதாயின் ஏற்படும் அனுகூலங்கள் இரண்டைப் பிரேரிக்க
( 3 புள்ளிகள் )

7 கரப்பந்தாட்டம் **அல்லது** வலைப்பந்தாட்டம் **அல்லது** உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை விதிமுறையுடன் வியைாடி மகிழ்வர்

A ,B. C ஆகிய வினாக்களில் ஒன்றுக்கு விடை தருக

A

1) கரப்பந்தாட்டத்துக்கான அளவீட்டுடன் கூடிய மைதான கிடைப்படத்தை வரைக? வீரர்களின் நிலையினைக் குறிக்க ( 3 புள்ளிகள் )
2) அவ்விளையாட்டின் திறன்கள் யாவற்றையும் குறிப்பிடுக? ( 2 புள்ளிகள் )
3) இவ் விளையாட்டின் ஆரம்பமும் ஒரு புள்ளி பெறும் முறையையும் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள் )
4) இவ் விளையாட்டின் நடுவராக நீர் கடமையாற்றின் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வீரர் அறைந்த பந்தை காவேரி விளையாட்டுக் கழக வீரர் எடுக்கும் போது பந்து அவ்வீரரில் இரு முறை படுதல் இதற்காக நீர் எடுக்கும் நடவடிக்கை என்ன? ( 2 புள்ளிகள் )

B

1) வலைப்பந்தாட்டத்துக்கான அளவீட்டுடன் கூடிய மைதான கிடைப்படத்தை வரைக? வீரர்களின் நிலையினைக் குறிக்க ( 3 புள்ளிகள் )
2) அவ்விளையாட்டின் திறன்கள் யாவற்றையும் குறிப்பிடுக? ( 2 புள்ளிகள் )
3) இவ் விளையாட்டின் ஆரம்பமும் ஒரு புள்ளி பெறும் முறையையும் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள் )
4) இவ் விளையாட்டின் நடுவராக நீர் கடமையாற்றின் மத்திய எறிகை எடுக்கும் பகுதிக்கு அண்மையாக காமினி, கெமுனு அணியைச் சேர்ந்த இருவரும் சேர்ந்து பந்தைப் பெற முனைதல் இதற்காக நீர் எடுக்கும் நடவடிக்கை என்ன? ( 2 புள்ளிகள் )

C

1) உதைபந்தாட்டத்துக்கான அளவீட்டுடன் கூடிய மைதான கிடைப்படத்தை வரைக? வீரர்களின் நிலையினைக் குறிக்க ( 3 புள்ளிகள் )
2) அவ்விளையாட்டின் திறன்கள் யாவற்றையும் குறிப்பிடுக? ( 2 புள்ளிகள் )
3) இவ் விளையாட்டின் ஆரம்பமும் ஒரு புள்ளி பெறும் முறையையும் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள் )
4) இவ் விளையாட்டின் நடுவராக நீர் கடமையாற்றின் நட்சத்திர விளையாட்டுக் கழக அணி வீரர் காவேரி விளையாட்டுக் கழக வீரரை காலினால் வேண்டுமென்று உதைத்தல் இதற்காக நீர் எடுக்கும் நடவடிக்கை என்ன? ( 2 புள்ளிகள் )